# வாக்குமூலம்
## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
## மேட்டூர்,
## தேதி: 15.09.2025
## OS. No. 27/2015 and 122/2015
## வழக்கு சாட்சி DW.2–கோவிந்தராஜ் , த/பெ.பெருமாள்

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) நான் 5ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நீதிமனற்திலிருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை வழங்கப்பட்டா என்றால் இல்லை. யாருக்காக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் 1ம் பிரதிவாதி இந்திராணிக்காக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் தற்போது மேச்சேரியில் சாம்ராஜ்பேட்டையில் குடியுள்ளேன். நான் எலக்டிரிசனாக வேலை செய்து வருகிறேன். நான் 1992ம் வருடம் ஜனவரி மாதத்தில் பிறந்தேன். என் தந்தை பெருமாள் சுமார் 15 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார். என் பெரியப்பா பெரியகவுண்டர் உயிருடன் உள்ளாரா என்றால் உள்ளார். அவருக்கு சுமார் 45, 50 வயது இருக்கும். அவர் நல்ல ஆரோக்கியத்துடன் நடமாடி வருகிறாரா என்றால் ஆமாம். நான் 1ம் பிரதிவாதியின் கணவர் கோவிந்தராஜ் என்பவரை பார்த்துள்ளேனா என்றால் இல்லை. அவர் இறந்த தேதி தெரியுமா என்றால் நான் பிறப்பதற்கு முன்பே இறந்துவிட்டார்.

2) 4ம் வாதி சந்திரசேகர் அவர்களின் தந்தை பெயர் என்னவென்றால் சண்முகம் ஆகும். அவர்களுக்கு நான் பங்காளி உறவு வேண்டும். மேற்கண்ட சண்முகம் இறந்து தேதி தெரியுமா என்றால் தெரியாது. எங்களுக்குள் உறவுமுறை மட்டும் தான் பழக்கவழக்கம் இல்லை. கோவிந்தராஜின் அண்ணன் பெரியகவுண்டர் என்பவரை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். கோவிந்தராஜின் மனைவி இந்திராணிக்கு எத்தனை குழந்தைகள் என்றால் ஒரு மகள் மற்றும் ஒரு மகன் உள்ளார்கள். என் நிரூபண வாக்குமூலத்தில் 4வது பக்கத்தில் 7வது வரியில் கோவிந்தராஜ் மேட்டுப்பட்டியிலுள்ள சுமார் 1 ஏக்கர் நிலத்தையும், அதிலுள்ள ஓட்டு வீட்டையும் வாய்மொழியாக பெற்று அனுபவித்து வருகிறார் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால்

எனக்கு நேரடியாக தெரியவில்லை, என் தந்தை சொல்லி எனக்கு தெரியும். யாரிடமிருந்து பெற்றார் என்றோ, எந்த வருடத்தில் பெற்றார் என்றோ குறிப்பாக என் நிருபண வாக்குமூலத்தில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான்.

3) கோவிந்தராஜ் அவர்கள் ஆடு, மாடுகள் வாங்கி விற்பனை செய்யும் தொழில் செய்து வந்தாரா என்றால் ஆமாம். கோவிந்தராஜ் நிலத்தை விற்றதாக என் நிருபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதி யார் சொல்லி எனக்கு தெரியும் என்றால் என் தந்தை சொல்லி தெரியும், எனக்கு 14, 15 வயது இருக்கும் போது சொன்னார். அந்த அடமானம் சுவாதீனத்துடன் கூடிய அடமானமா இல்லை சுவாதீனம் இல்லாத அடமானமா என்றால் அது குறித்து என் தந்தை சொல்லவில்லை. கோவிந்தராஜிக்கு இரண்டு குழந்தைகள் உள்ளனர் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான், அவர்கள் பெயர் அருள் மற்றும் கவிதா ஆகும். அருள் மற்றும் கவிதா இருவருமே எனக்கு வயதில் மூத்தவர் என்றால் ஆமாம். அருள், கவிதா இருவரும் என்னை விட வயதில் மூத்தவர்கள் என்பதால் அவர்கள் பிறந்த விவரங்கள் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். 4ம் வாதியின் தந்தை சண்முகம் எப்போது இறந்தார் என்றால் சரியாக நினைவில்லை. அவருடைய இறப்பிற்கு நான் சென்றேனா என்றால் சென்றேன். என் வீட்டிற்கும், சண்முகம் வீட்டிற்கும் எவ்வளவுதொலைவு என்றால் இரண்டு வீடுகள் தள்ளி அமைந்துள்ளது.

4) எந்தெந்த நிலத்தை யார் யாருக்கு இரண்டாக பிரித்து கொடுத்தார்கள் என்று என் நிருபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை, இந்திராணிக்கு 1 ஏக்கர் நிலமும், வெள்ளையம்மாளுக்கு 1 ஏக்கர் நிலமும் கொடுத்தார்கள். எந்த வருடத்தில் பிரித்து கொடுக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியவில்லை. நான் பிறப்பதற்கு முன்பே பிரித்து கொடுத்துவிட்டார்களா என்றால் ஆமாம். சண்முகத்திற்கு எத்தனை ஏக்கர் சொத்து உள்ளது என்றால் எனக்கு தெரியவில்லை. வாதி சந்திரசேகரர் வகையறாவிற்கே சண்முகம் அனைத்து சொத்துக்களையும் எழுதி கொடுத்துவிட்டதாக என் நிருபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் யார் சொல்லி தெரியும் என்றால் 1ம் பிரதிவாதி இந்திராணி

சொல்லி தெரியும். என் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் நான் சொல்லி தான் தயார் செய்யப்பட்டதாகும். 1ம் பிரதிவாதி சொல்லி தயார் செய்யப்பட்ட என் நிரூபண வாக்குமூலத்தில் தான் நான் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

5) கோவிந்தராஜ் நிலத்தை அடமானம் வைத்த விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அந்த நிலத்தை 1ம் பிரதிவாதி மீட்டதாக நான் சொல்லியுள்ள விவரமும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். தற்போது மின் கட்டணம், மின் வரி ஆகியவற்றை 1ம் பிரதிவாதி தான் செலுத்தி வருகிறார் என்ற விவரம் எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் நேரடியாக தெரியாது, பக்கத்திலுள்ளதால் தெரிந்துகொண்டேன். 1ம் பிரதிவாதி இந்திராணி இரண்டாவதாக திருமணம் செய்து கொண்ட விவரம் தெரியுமா என்றால் தெரியாது. எங்கள் வீட்டிலிருந்த பார்த்தால் 1ம் பிரதிவதி இந்திராணி வீடு தெரியுமா என்றால் எங்கள் வீட்டிற்கு பின்னால் இருந்து பார்த்தால் தெரியும். 1 ம் பிரதிவாதி இந்திராணிக்கு பாலகிருஷ்ணன் என்பவருடன் இரண்டாவது திருமணம் நடைபெற்றுள்ளது என்றும், அதன் பயனாக ஸ்ரீநிதி என்று மகள் பிறந்துள்ளார் என்றால் சரியல்ல. வாதிகள் தான் தாவா சொத்துக்களுக்கு தற்போது வரை வரி வகையறாக்கள் செலுத்தி வருகிறார் என்றும், நான் தவறான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு தெரியாத விவரங்களை தெரிந்ததாக என் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளது தவறு என்றும், அதனால் என் சாட்சியம் நிராகரிக்கப்படவேண்டும் என்றால் சரியல்ல.

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.